# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 56 — 1973 අප්‍රේල් 19 වැනි බ්‍රහස්පතින්ද — 1973.04.19

56 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ) — விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள், .. .. | 401 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 404 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 405 | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. . | 405 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சு*

வெற்றுத்தார்பீப்பா, வெற்றுச் சீமெந்துபை, வாங்குவதற்கும் எடுத்துச் செல்வதற்குமான கேள்விப் பத்திரம்

நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பின் கீழ் உள்ள கிழக்குப் பிராந்திய அலுவலகக் கேள்விச் சபைத் தலைவர் அவர்களால்,

(1) வெற்றுத்தார்ப்பீப்பா

(2) வெற்றுச் சீமெந்துப்பை

ஆகியவற்றை வாங்கவும், எடுத்துச் செல்லவும் இலங்கையரிடமிருந்தும், இலங்கையர் தாபனங்களிடமிருந்தும் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் 3.5.73 அன்று முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கிழக்குப் பிராந்திய வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்திலோ, அல்லது எந்தவொரு கச்சேரியிலோ கேள்விப் பத்திரக் கட்டுப்பணமான ரூபா 100 ஐச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிக்கும் இடத்து 28.4.73 அன்று காலை 10.00 மணிவரை கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

3 கேள்விப் பத்திரங்கள் 03.05.73 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு கிழக்குப் பிராந்திய வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் சமயம் கேள்விப்பத்திரகாரர்கள் அவ்விடத்தில் சமுகமளிக்கமுடியும்.

4. இவ் ஒப்பந்தங்கள் 31.12.73 வரை நீடிக்கும்.

5. மேலதிக விபரங்கள் கிழக்குப் பிராந்திய வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

என். பி. தாமோதரம்,
இ. பி. வேலைகள் பணிப்பாளர்,
மட்டக்களப்பு.

4-452 — 19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

### முக்கிய அறிவித்தல்

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

### குறுகியகால கேள்விப்பத்திர அறிவிப்பு

### பொருட்களைக் கொண்டு செல்வதற்கு மோட்டார் லொறிகள், உழவு இயந்திரங்கள், மோட்டார் டிப்பர்கள், மற்றும் இயந்திரங்களை குறித்த கூலியில் வாடகைக்கமர்த்துவதற்கும், குறித்த கூலியில் மற்றும் நானாவித சேவைகளுக்கு ஒப்பந்த காரரை பதிவு செய்வதற்குமான கேள்விப்பத்திரங்கள்

(1) 1973 ம் ஆண்டு மே மாதம் 1 ம் திகதி தொடக்கம், 8 மாத காலத்திற்கு, பொருட்களைக் கொண்டு செல்வதற்கு, மோட்டார் லொறிகள், உழவு இயந்திரங்கள், மோட்டார் டிப்பர்கள் ஆகியவற்றை குறித்த கூலியில் வாடகைக் கமர்த்தவும், மண்வெட்டல், காடு திருத்தல் போன்ற சேவைகளுக்கு மற்றும் இயந்திரங்களை வாடகைக்கமர்த்தவும், மற்றும் நானாவித சேவைகளுக்கு ஒப்பந்த காரரை பதிவு செய்வதற்குமான கேள்விப் பத்திரங்களை, நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந் தெருக்கள் அமைச்சின், வடமேல் மாநில, ஆள்புல வேலைகள் பணிப்பாளர் காரியாலய கேள்விப் பத்திர சபைத் தலைவர், இலங்கையரிடமிருந்தும், இலங்கைத் தாபனங்களிடமிருந்தும் ஏற்றுக்கொள்வார்.

(2) 1973 ம் ஆண்டு மே மாதம் 11 ம் திகதி காலை 10 மணி, வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இக்காரியாலயத்திலோ, அல்லது வேறு எந்த வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்திலோ அல்லது யாழ்ப்பாணம், திருகோணமலை, பதுளை கச்சேரிகளிலோ, கேள்வி வைப்புப் பணமாக ரூபா 25 செலுத்தியதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தவிடத்து, 10.05.73 ம் திகதி மாலை 2 மணி வரை கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

(3) மேலதிக விபரங்களை, குருநாகல், கண்டி வீதியில் உள்ள வடமேல் மாநில வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டி. வி. ஏ.. சேனாரத்ன,
வேலைகள் பணிப்பாளர்,
வடமேல் மாநிலம்.

வேலைகள் பணிப்பாளர் காரியாலயம்,
வடமேல் மாநிலம்,
கண்டி வீதி,
குருநாகல்,
04.04.1973.

4–449—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

---

### வெற்றுத்தார்ப் பீப்பாக்கள், வெற்றுச் சீமெந்துப் பைகள் முதலியவற்றை வாங்குவதற்கும் எடுத்துச் செல்வதற்குமான கேள்விப்பத்திரங்கள்

நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பின் கீழ் உள்ள இரத்தினபுரி சப்பிரகமுவ பிராந்தியத்தில் கீழ், குறிக்கும்,

(அ) ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பின் கீழ் உள்ள இரத்தினபுரி மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் பகுதிகள்,

(ஆ) ஆள்புல சிவில் பொறியியல், அமைப்பின் கீழ் உள்ள கேகாலை மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் பகுதிகள்,

ஆகிய இடங்களில் நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பின் கீழ் உள்ள சப்பிரகமு பிராந்திய அலுவலக கேள்விச் சபைத் தலைவர் அவர்களால்

(1) வெற்றுத் தார்ப் பீப்பாக்கள்

(2) வெற்றுச் சீமெந்து பைகள்

ஆகியவற்றை வாங்கவும், எடுத்துச் செல்லவும், இலங்கையர்களிடம் இருந்தும், இலங்கையர் ஸ்தாபனங்களிடம் இருந்தும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கா அல்லது கேகாலை மாவட்டத்திற்கா என்பதை கேள்விப் பத்திரங்களில் தெளிவாக சுட்டிக்காட்ட வேண்டும்.

(2) கேள்விப் பத்திரங்கள் 15.05.73 அன்று முற்பகல் 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் சப்பிரகமுவ பிராந்திய வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்திலோ அல்லது எந்தவொரு கச்சேரியிலோ, குறிப்பிடப்பட்ட இரு மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கேள்விப் பத்திரக் கட்டுப்பணமான ரூபா 100 ஐ செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டினை சமர்ப்பிக்குமிடத்து 02.05.73 அன்று பிற்பகல் 2 மணிவரை கேள்விப் படிவங்களை வழங்கப்படும்.

(3) கேள்விப் பத்திரங்கள் 15.05.73 அன்று முற்பகல் 11 மணிக்கு இரத்தினபுரியில் உள்ள சப்பிரகமுவப் பிராந்திய வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் சமயம் கேள்விப் பத்திரம் சமர்ப்பித்தோர் அவ்விடத்தில் சமுகமளிக்க முடியும்.

(4) இவ் ஒப்பந்தங்கள் 31.12.1973 வரை நீடிக்கும். மேலதிக விபரங்களை இரத்தினபுரியில் உள்ள சப்பிரகமுவ பிராந்திய வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. செல்வத்துரை,
சப்பிரகமுவ பிராந்திய வேலைகள்
பணிப்பாளர்.

சப்பிரகமுவப் பிராந்திய
வேலைகள் பணிப்பாளர் அலுவலகம்,
இரத்தினபுரி.
4.4.1973.

4-471—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56.

---

### நீர்ப்பாசனத் திணைக்களம்

### சர்வதேச அபிவிருத்தி அவை, கடன் 121 சிஈ ஆல் நிதியிடப்படும் ஏற்று நீர்ப்பாசனச் செய்தித்திட்டங்களுக்கு பொறித் தொகுதியும் சாதனங்களும் வழங்குவதற்கான கேள்விகள்

1. தலைவர், கேள்விச் சபை, நீர்ப்பாசன மின்சக்தி பெருவீதிகள் அமைச்சு, அ. பெ. 500, கொழும்பு 1 ஸ்ரீ லங்கா, அவர்களால் கீழே குறிப்பிடப் பட்டிருக்கும் இனங்களில் ஏதாயினும் அல்லது முழுவதையும் வழங்குவதற்கான கேள்விகள் இத்தால் வரவேற்கப்படுகின்றன.

| இன எண் | விவரணங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| அ | 4 டபிள்யு டி வாகனங்கள்—ஜீப்புகள் | 5 |
| ஆ | கைச்சிவிறிகள். 3 கலன் கொள்ளளவு | 45 |
| இ | பண்ணைத் திருக்ரர்கள் | 4 |
| ஈ | மட்டமடிக்கும் திருக்ரர்கள் 150 ப.வ. மட்டமாக்கி இணைப்புகளுடன் | 1 |
| உ | 8" விட்ட பம்புகள் | 6 |
| ஊ | 6" விட்ட பம்புக்ள் | 53 |
| எ | 8" விட்ட உறுதியான பி. வி. ஜி. குழாய்களும் பொருத்திகளும் | 1,00,000 அடி |
| ஏ | மட்டமாக்கலுக்கான தரப்படுத்திகள் | 2 |

2. இக் கேள்வியின் கீழ் வழங்கப்படும் பொருள்கள் சர்வதேச அபிவிருத்தி அவையின் எவ்வங்கத்துவ நாட்டினதும் சுவிற்சர்லாந்தினதும் உற்பத்தியாளர்களினதாய் அல்லது விநியோகதரார்களுடையதாயிருத்தல் வேண்டும்.

3. கேள்விகள் யாவும் நீர்ப்பாசனப் பணிப்பாளர், அ. பெ. 1138, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு, ஸ்ரீலங்கா, அவர்களிடமிருந்து 1973 ஜூலை 10 ஆம் திகதி வரை மீளளிப்புச் செய்யப்படாத கட்டணமாக ரூபா 50/- கொடுப்பனவு மூலம் பெறக்கூடியதாகவுள்ள படிவங்களில் செய்யப்படல் வேண்டும். தொகை, காசுக் கட்டளை, காசோலை அல்லது வரைவு மூலம் ஸ்ரீலங்கா ரூபாக்களில் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

4. கேள்விகள் யாவும் பதிவுத்தபால் மூலம் தலைவர், கேள்விச் சபை, நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சு, அ. பெ. 500, கொழும்பு, ஸ்ரீலங்கா, அவர்களை 1973 ஜூலை 24 ம் திகதி மு.ப. 11.00 மணிக்குப் பிந்தாது அடையுமாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அங்கீகாரமளிக்கப்பட்ட உள்ளூர்ப் பிரதிநிதிகள், தமது கேள்விகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்ப முயலாத வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் அல்லது தலைவர்கள் அல்லது இருவர்களுக்குமாக, தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதாயிருந்தால், அவர்களோ அல்லது அவர்களது முகவர்களோ பொறியிடப்பட்ட கேள்விகளைத் திரு. எல். சேனாதிராசா, பிரதம கணக்காளர், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சு, காலி முகச் செயலகம், கொழும்பு, ஸ்ரீ லங்கா, அவர்களிடம், 1973 ஜூலை 24 ம் திகதி முற்பகல் 11.00 மணிக்குப் பிந்தாமற் கையளித்து பெற்றமையை அறிவிக்கும் துண்டொன்றைப் பெறுதல் வேண்டும். பொறியிடப்பட்ட உறையானது வழங்கல் விவரணங்களையும் கேள்வியாளர்களின் பெயரையும் விலாசத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

5. கேள்விகள் தலைவர், கேள்விச் சபை, நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சு, காலிமுகச் செயலகம், கொழும்பு, ஸ்ரீ லங்கா, அவர்களின் அலுவலகத்தில் 1973 ஜூலை 24 ம் திகதி மு.ப. 11.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் பொழுது கேள்வியாளர்கள் அல்லது அவர்களது முறைப்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.

6. நிபந்தனைகளும், கேள்வி முறைமையும் கேள்விப்படிவத்தில் விதிக்கப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.

7. மேலும் விவரங்களை, நீர்ப்பாசனப் பணிப்பாளர், பௌத்த லோகமாவத்தை அ. பெ. 1138, கொழும்பு 7, ஸ்ரீ லங்கா, அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. எச். பெரேரா,
நீர்ப்பாசனப் பணிப்பாளர்.

அ. பெ. 1138,
பௌத்தலோக மாவத்தை,
கொழும்பு 7, ஸ்ரீலங்கா,
1973.04.06.

4-465—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56.

---

இலங்கைப் போக்கு வரத்துச் சபை

தேவைக்கு மேற்பட்ட மாற்றுறுப்புக்களின் விற்பனை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், இரத்மலானை இ. போ. ச. சாலை விற்றுத்தீர்க்கும் நிலையத்திலிருந்து தேவைக்கு மேற்பட்ட உபயோகிக்கப்படாத மாற்றுறுப்புக்களை கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்காக, கீழே குறித்துள்ள முடிவுத் தேதிகளில் மு. ப. 10.00 மணிவரை, பொறியிட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

| இனம் | முடிவுத்தேதி |
|---|---|
| 1. பெட்போட் மாற்றுறுப்புக்கள் | 1973.05.11 |
| 2. அல்பியன் மாற்றுறுப்புக்கள் | 1973.05.25 |
| 3. கை, கார்ட்னர், இன்டநாஷனல் | 1973.05.31 |

கேள்வி சம்பந்தமாக கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100 வரையாகக் குறிக்கப்பட்டுள்ளது.

குறித்த கேள்விப் பத்திரக் கட்டுப்பணத்தையும் அத்துடன் ஒவ்வொரு தொகுதிக் கேள்விப் பத்திரத்திற்கு மீளளிக்கப்படமாட்டாத கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 25 வீதம் கட்டுவதன் பேரில் மேல் குறிக்கப்பட்ட முடிவுத் தேதிகளுக்கு முந்திய நாட்களில் பி. ப. 3.00 மணிவரை இவ்வலுவலகத்திலிருந்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விற்பனைக்குரிய எல்லா மாற்றுறுப்புக்களையும், இரத்மலானை இ. போ. ச. சாலை விற்றுத்தீர்க்கும் நிலையத்தில், வழக்கமான வேலை செய்யும் நேரங்களில் பார்வையிட்டுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்.

விநியோகப் பகுதி,
வெரகெரை,
பொரலஸ்கமுவை.

4-547—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56.

---

கச்சேரி, புத்தளம்

பின்வரும் கட்டு வேலைகளுக்கு/திருத்த வேலைகளுக்கு பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 4.5.1973 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை புத்தளம் மாவட்ட அரசாங்க அதிபர் ஏற்றுக்கொள்வார்.

"கற்பிட்டி வாடி வீட்டிற்குத் திருத்தங்கள்"

2. புத்தளம் அரசாங்க அதிபரிடம் 3.5.73 ம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விப் பத்திரங்களை இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். புத்தளம் அரசாங்க அதிபரிடமிருந்து இவ்வேலைகள் தொடர்பான எல்லா விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் அங்கீகாரம் பெற்ற சங்கங்களும் மாத்திரம் கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதியுடையவராவர். ஒவ்வொரு ரூபா 10/ க்கும் கச்சேரிப் பற்றுச் சீட்டுகளைச் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திரங்களை அனுப்பக் கருதுபவர்களுக்குக் கேள்விப் பத்திர படிவங்கள் வழங்கப்படும். கிராம முன்னேற்ற சங்கங்கள் பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் போன்ற அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப் பணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

3. கடித உறைகளில் "கற்பிட்டி வாடிவீட்டிற்குத் திருத்தங்களுக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 4.5.73 ம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் புத்தளம் கச்சேரி அரசாங்க அதிபருக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இந்தத் திகதியில் இந்த நேரத்துக்கு பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. 5.5.73 ம் திகதி காலை 10.00 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் எல்லா கேள்விதாரர்களும் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விதாரர் வேலைநிறைவுக்கான ஒப்பந்த தொகையில் 5 சத வீதத்தை பிணை வைப்பாகச் செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும். அங்ஙனம் அறிவிக்கப்பட்ட 10 தினங்களுக்குள் அவ்விதம் செய்யத் தவறுபவர் கேள்வி வைப்புப் பணத்தை இழப்பார்.

5. செய்து முடித்த வேலையின் 90 சத வீதம் வரை பணம் கொடுப்பனவு செய்யப்படும். மிகுதிப் பணமும் பிணை வைப்புப் பணமும் வேலை நிறைவெய்தியதிலிருந்து மூன்று மாதங்களில் பின்னர் கொடுக்கப்படும்.

ப. சு. விஜேவீர,
அரசாங்க அதிபர், புத்தளம் மாவட்டம்.

கச்சேரி,
புத்தளம்.
4.4.73.

4-459—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56.

---

அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

மிதவைத் தாம்பாளங்களை விநியோகித்தல்

கொழும்பு 1, லோற்றஸ் வீதி, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகத்தின் 6 வது மாடியிலுள்ள அஞ்சல் தொலைத் தொடர்புத் திணைக்கள நிருவாகப் பகுதியின் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால், மிதவைத் தாம்பாளங்களை வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமான கேள்விகள் 24.05.73, 10 மணி (காலை) வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு 1, லோற்றஸ் வீதி, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகத்தின் 5 வது மாடியிலுள்ள பிரதான தொலைத் தொடர்புப் பொறியிலாளரினால் வழங்கப்படும் படிவங்களின் இரட்டைப் பிரதிகளில் கேள்விகளைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும். இவரிடமே இது பற்றிய சகல விவரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். இவரின் அலுவலகத்தில் கேள்விச் சாதனங்களையும் பார்வையிடலாம்.

பிரதான தொலைத்தொடர்புப் பொறியியலாளரின் அலுவலகத்தில் விண்ணப்பிக்கும் அக்கறையுள்ள கேள்வியாளர்கள், அஞ்சலலுவலகத்திற்குப் பொறுப்பாயுள்ள அஞ்சலதிபரிடம் அல்லது கொழும்பு 1, கோட்டை, மத்திய தொலைபேசி அலுவலகத்திலுள்ள தந்திக் காசாளரிடம் 100 ரூபா பெறுமதியான கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்ததும், இவர்களுக்கு 1973-05-15 திகதி நண்பகல் 12 மணி வரையில் கேள்விச் சாதனங்கள் வழங்கப்படும்.

ஏ. ஆர். எம். ஜெயவர்த்தன,
அஞ்சல் அதிபர் நாயகமும், தொலைத் தொடர்புப் பணிப்பாளரும்.

நிருவாகப் பகுதி,
6 வது மாடி,
அ. தொ. தலைமையகம்,
லோற்றஸ் வீதி,
கோட்டை,
கொழும்பு-1.

4-544—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56.

**வவுனியா மாவட்டத்தின் மாவட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ள கட்டிடங்கள் திருத்த வேலைகளைச் செய்வதற்காக கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கான அறிவித்தல்**

வவுனியா மாவட்டத்தில் மேற்படி கட்டிடத்தில் உள்ள திருத்த வேலைகளைச் செய்வதற்காக 1973 ம் ஆண்டு மே மாதம் 10 ந் திகதி மு. ப. 10.30 மணி வரைக்கும் ஏதாவது ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் கீழ் ரூபா 10,000.00 (பத்தாயிரம்) பெறுமதி வாய்ந்த கட்டிடங்களின் வேலைகளைச் செய்வதற்காக பதிவு செய்து கொண்ட கொந்தராத்துகாரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் வவுனியா கச்சேரி கேள்விப் பத்திரச் சபை தலைவரினுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரப் படிவங்கள் 1973 ம் ஆண்டு மே மாதம் 3 ந் திகதி பகல் 12.00 மணி வரைக்கும் வவுனியா கச்சேரியினுல் வழங்கப்படும்.

3. கேள்விப் பத்திரப் படிவம் வினியோகிக்கப்படுவதன் முன் வவுனியா கச்சேரியில் ரூபா 25/- திலுவைப் பணம் செலுத்தியதற்கான ரசீத்தை அரசாங்க அதிபரின் முன் சமர்ப்பிக்க வேண்டுமாறு கேள்விப் பத்திரதாரர்கள் கோரப்படுவார்கள்.

4. கேள்விப் பத்திரங்கள் 10 ந் திகதி மே மாதம் 1973 ம் ஆண்டு மு. ப. 10.30 மணிக்கு வவுனியா கச்சேரியில் திறக்கப்படும்.

5. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரம் உள்ளடங்கிய தபாலுறை "சீல்" பொறிக்கப்பட்டு, இடது கைப்பக்க மேல் மூலையில் திருத்த வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரம் பதிவுத் தபால் மூலம் அனுப்பாது விடும் சந்தர்ப்பத்தில், வவுனியாக் கச்சேரியில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் கேள்விப் பத்திரகாரரால் நேரடியாக போடப்படல் வேண்டும்.

6. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரதாரர்கள் இக்கொந்தராத்தை செய்து முடிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர்களை மாத்திரமே வேலைக்கு அமர்த்துதல் வேண்டும். மேலும், அத்தொழிலாளர்களை இயன்றளவு அவ்வேலைகளைச் செய்ய வேண்டியுள்ள பகுதியில் இருந்தே தெரிந்து எடுக்கப்படல் வேண்டும்.

7. இவைகள் தவிர்ந்த மேலதிக விபரங்கள் அறிய வேண்டி இருப்பின் வவுனியா அரசாங்க அதிபருக்கு எழுதி அறிந்து கொள்ளலாம்.

எல். பி. விக்கிரமாராச்சி,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

அரசாங்க அதிபர் அலுவலகம்,
வவுனியா, 1973.04.09.

4-575—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

---

**வவுனியா மாவட்டத்தில் முல்லைத்தீவு வாடி வீட்டில் திருத்தங்கள் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கான அறிவித்தல்**

வவுனியா மாவட்டத்தில் மேற்படி கட்டிடத்தில் உள்ள திருத்த வேலைகளைச் செய்வதற்காக 1973 ம் ஆண்டு மே 10 ந் திகதி மு. ப. 10.30 மணிவரைக்கும் ஏதாவது ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் கீழ் ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம்) பெறும்திவாய்ந்த கட்டிடங்களின் வேலைகளைச் செய்வதற்காக பதிவு செய்து கொண்ட கொந்தராத்துக்காரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் வவுனியா கச்சேரி கேள்விப் பத்திரச் சபை தலைவரினுல் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரம் படிவங்கள் 1973 ம் ஆண்டு மே மாதம் 3 ந் திகதி பகல் 12.00 மணி வரைக்கும் வவுனியா கச்சேரியினுல் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரப் படிவம் விநியோகிக்கப்படுவதன் முன் வவுனியா கச்சேரியில் ரூபா 25/- நிலுவைப் பணம் செலுத்தியதற்கான ரசீத்தை அரசாங்க அதிபரின் முன் சமர்ப்பிக்க வேண்டுமாறு கேள்விப் பத்திரதாரர்கள் கோரப்படுவார்கள்.

4. கேள்விப் பத்திரங்கள் 10 ந் திகதி மே மாதம் 1973 ம் ஆண்டு மு. ப. 10.45 மணிக்கு வவுனியா கச்சேரியில் திறக்கப்படும்.

5. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரம் உள்ளடங்கிய தபாலுறை "சீல்" பொறிக்கப்பட்டு, இடது கைப்பக்க மேல் மூலையில் திருத்த வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரம் பதிவுத் தபால் மூலம் அனுப்பாது விடும் சந்தர்ப்பத்தில், வவுனியா கச்சேரியில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் கேள்விப் பத்திரகாரரால் நேரடியாக போடப்படல் வேண்டும்.

6. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரதாரர்கள் இக்கொந்தராத்தை செய்து முடிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர்களை மாத்திரமே வேலைக்கு அமர்த்துதல் வேண்டும். மேலும், இத்தொழிலாளர்களை இயன்றளவு அவ்வேலைகளைச் செய்ய வேண்டியுள்ள பகுதியில் இருந்தே தெரிந்து எடுக்கப்படல் வேண்டும்.

7. இவைகள் தவிர்ந்த மேலதிக விபரங்கள் அறிய வேண்டி இருப்பின் வவுனியா அரசாங்க அதிபருக்கு எழுதி அறிந்து கொள்ளலாம்.

எல். பி. விக்கிரமாராச்சி,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

அரசாங்க அதிபர் அலுவலகம்,
வவுனியா, 1973.04.09.

4-573—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

---

## கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

**ஸ்ரீ லங்கா தரைப்படைத் தலைநிலையம்—கேள்விப்பத்திர முடிவுகள்**

1973 சனவரி மாதம் 19 ஆந் திகதிய 43 இலக்கத்தைக் கொண்ட ஸ்ரீ லங்கா குடியரசு வர்த்தமானியின் பகுதி I தொகுதி (IIஅ) ல் பிரசுரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை விநியோகம் செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரங்களின் முடிவுகள் பின்வருமாறு :—

| கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்களின் எண்ணிக்கை | விநியோகம் | ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியாளர் |
|---|---|---|
| 03 | .. மரக்கறி, தேங்காய் பண்ணை உற்பத்திப் பொருள், மீன், இறைச்சி மற்றும் புதிய உணவுப் பொருள்கள், காலை உணவுப் பொருட்கள் | திரு. ஏச். டபிள்யூ. நிலவீர, ஆமி அண்ட் நேவி ஸ்ரோஸ் மேற்பார்த்து, தியத்தலாவை |

மேலே கூறப்பட்டுள்ள உணவுப் பொருட்களை விநியோகஞ் செய்வதற்கான கேள்விப்பத்திர விலைகளை கொழும்பு, பாலதக்ச மாவத்தையில் உள்ள ஸ்ரீ லங்கா தரைப்படைத் தலைநிலையத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

ஸ்ரீ லங்கா தரைப்படைத் தலைநிலையம்,
பாலதக்ச மாவத்தை,
அ. அ. பெ. எண். 553,
1973 ம் ஆண்டு ஏப்பிறல் மீ 05 ந உ.

மேஜர்-ஜெனரல்,
ஸ்ரீ லங்கா தரைப்படைத் தளபதி.

4-475—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

*அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கான பாவிக்கமுடியாத பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனை 30.4.1973*

*மெத்தைகள், நுளம்புவலைகள், வெறுமையான எண்ணெய் தகரங்கள் ஆகியன 1973 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30 ம் தேதி காலை 9.00 மணியளவில் மிரிகாமை பொலிஸ் நிலையவளவில் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்.*

*ஏலத்தில் பொருட்களை வாங்குபவர்கள் பொருட்களை வாங்கும் பொழுதே பணத்தை செலுத்தி உடனடியாகவே பொருட்களை எடுத்துச் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர். மேற்கூறப்பட்ட பொருட்களை பகிரங்க ஏலவிற்பனைக்கு முதல் மூன்று நாளும் பார்வையிடுவதற்காக மேற்கூறிய பொலிஸ் நிலைய பண்டகசாலையில் வைக்கப்படும்.*

*பொலிஸ் அத்தியட்சகர்,*
*நுகேகொடை.*

*பொலிஸ் அலுவலகம்,*
*நுகேகொடை.*
*2.4.1973.*

*4-462—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56*

---

*இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி*

*பாவித்த டயர்கள், ரியூப்புகள், துணிகள், வெற்றுப் [illegible]ணிகள், பீப்பாக்கள் யாவும் 1973 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் தேதி காலை 9.00 மணியிலிருந்து விற்பனை செய்வதற்காக புகையிரதப் பண்டகசாலை, மருதானையில் வைக்கப்பட்டிருக்கின்றன.*

*முழு விவரங்களுக்கும், மருதானையிலிருக்கும் புகையிரதப் பண்டகசாலை சுப்பிரண்டனைத் தொடர்புகொள்ளவும்.*

*4-540—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56*

---

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

***வவுனியா மாவட்டத்தில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை—1.7.73 தொடக்கம் 30.6.74 வரை***

*இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணைகளில் சொல்லப்பட்ட வவுனியா மாவட்டக் கள்ளுத் தவறணைகளில் 1.7.73 தொடக்கம் 30.6.74 வரைக்குமான கால எல்லை வரை சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதன் பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்துவரும் பொது விதிகளுக்கமையவும், 31.10.72 ல் பிரசுரிக்கப்பட்ட 31/3 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் காணப்படும் கள்ளுத் தவறணைக் குத்தகை விதிகளுக்கமையவும் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றது.*

*2. கேள்விப்பத்திரங்கள் வவுனியா மாவட்ட கள்ளுக் குத்தகை 1973/74 என்று குறிப்பிட்டு, மே மாதம் 3ந் திகதி கீழே காட்டப்பட்டிருக்கும் நேர அட்டவணைப்படி வவுனியா அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.*

*3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித்தனி கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். எவரும், எந்த ஒரு தவறணைக்காவது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப் பத்திரங்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஐந்து பேருக்கு அதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்த ஒரு தவறணைக்கும் கேள்விப் பத்திரம் அனுப்ப முடியாது.*

*4. கேள்விக்காரர்—*

*(அ) நேர்முகத்தில் சமூகம் தராவிட்டால் ;*

*(ஆ) எந்தப் பகுதியில் அவருடைய காணி இருக்கின்றதோ அந்தப் பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப் பத்திரத்துடன் கேள்விப் பத்திரம் அணைக்காவிடில் ;*

*(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப் பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப் பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையில் 25 விகிதத்திற்குக் குறைந்தால் அவரது கேள்விப் பத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.*

*(ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைக்குக் கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர் அதே வேளையில் அதே ஆண்டுக்குரிய வேறு தவறணைக்குக் கேள்விப் பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப் பிரதியை அணைத்திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்கலாம். அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப் பத்திரப் பிரதி, மூலப் பிரதி இணைக்கப்பட்ட தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும்.)*

*5. கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கலாம். அல்லது வவுனியாக் கச்சேரியில் உள்ள கேள்விப் பத்திரப் பெட்டியிலும் போடலாம். ஆனல் கேள்விப் பத்திரம் எந்தத் தவறணைக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் பொறிக்கப்பட்டு என்வலப்பு சீல் பண்ணப்பட்டிருத்தல் வேண்டும்.*

*6. தவறணை விற்பனை நிபந்தனைக்கு அமைவாக ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் ரூ. 1,000 கட்டுப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சியாக கச்சேரி பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும். கட்டுப்பணங்கள் வவுனியா அரசாங்க அதிபரின் பெயரில் கட்டல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்பட்டவுடன் விற்பனை நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடத் தவறினல் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.*

*7. கேள்விப் பத்திரங்கள் பெற்றவர்கள், குத்தகை விற்பனையில் பங்கு பற்றத் தவறின் தங்கள் வைப்புப் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு கேள்விப் பத்திரத்தைத் திருப்பி அனுப்புதல் வேண்டும்.*

*8. எந்தவொரு கேள்விப் பத்திரத்தையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ வவுனியா அரசாங்க அதிபருக்கு மாத்திரம் உரிமையுண்டு.*

*9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனையிலும், ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிப்பிடும் பிணைப்பணத்தைச் செலுத்தவும் தேவையான முத்திரைகளைக் கொடுக்கவும் தயாராயிருத்தல் வேண்டும்.*

*10. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், குத்தகைக்காரர் என்று அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் தான் எந்த இடத்தை தவறணைக்காகத் தெரிவு செய்திருக்கிறர் என்பதை வவுனியா அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். புதுக்குடியிருப்பு 4 ம் இலக்கத் தவறணையும் வவுனியா 7 ம் இலக்கத் தவறணையும் தற்பொழுது இருக்கும் அதே இடத்தில் இவ்வருடம் இருக்க மாட்டாது.*

*11. மேற்கொண்டு விபரங்கள் அறிய விரும்பின் வவுனியாக் கச்சேரிக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளலாம்.*

மேற்குறிப்பிட்ட அட்டவணை

**வவுனியா மாவட்ட கள்ளுத் தவறணைகள் விற்பனை—1.7.73—30.6.74**

| இலக்கமும் இடமும் | | தவறணைகளின் உள்ளூர்ப் பகுதி | | விற்பனைத்திகதி | | நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. முல்லைத்தீவு | .. | முல்லைத்தீவு பட்டினசபை எல்லைக்குள் | .. | 3.5.73 | .. | மு. ப. 10.00 |
| 3. முள்ளியவளை | .. | முள்ளியவளை கிராமச்சபை எல்லைக்குள் | .. | 3.5.73 | .. | மு. ப. 10.15 |
| 4. புதுக்குடியிருப்பு | .. | புதுக்குடியிருப்பு கிராமச்சபை எல்லைக்குள் | .. | 3.5.73 | .. | மு. ப. 10.30 |
| 5. புதுமாத்தலன் | .. | புதுமாத்தலன் கிராம எல்லைக்குள் | .. | 3.5.73 | .. | மு. ப. 10.45 |
| 7. வவுனியா | .. | வவுனியா நகரசபை எல்லைக்குள் | .. | 3.5.73 | .. | மு. ப. 11.00 |
| 8. கற்சிலைமடு | .. | கற்சிலைமடு கிராம எல்லைக்குள் .. | .. | 3.5.73 | .. | மு. ப. 11.15 |
| 9. வட்டுவாக்கல் | .. | வட்டுவாக்கல் கிராம எல்லைக்குள் | .. | 3.5.73 | .. | மு. ப. 11.30 |

எஸ். சிவஞானம்,
மேலதிக அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

வவுனியாக் கச்சேரி,
1973 ந் ஆண்டு ஏப்பிரில் மீ 2 ந் உ.

4-574—19.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 56

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினல்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை—1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | 6.4.73 | வெள்ளி | 28.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் | 4.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் | 11.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி | 18.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| **மே** | 4.5.73 | வெள்ளி | 25.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 11.5.73 | வெள்ளி | 2.5.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 18.5.73 | வெள்ளி | 9.5.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 25.5.73 | வெள்ளி | 15.5.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| **யூன்** | 1.6.73 | வெள்ளி | 23.5.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 8.6.73 | வெள்ளி | 30.5.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.6.73 | வியாழன் | 6.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 22.6.73 | வெள்ளி | 13.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 29.6.73 | வெள்ளி | 20.6.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.